ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 77 — 1973 සැප්තැම්බර් 14 වැනි සිකුරාදා — 1973.09.14

77 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப்பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. | 369 |
| பதவிகள்— வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | 370 |
| துணை விதிகள் .. .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுகள் .. .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | 370 |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 371 |


**கவனிக்க.**—நீதி நிருவாகச் சட்ட மூலமும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (திருத்தம்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்

54 ஆம் பிரிவின் கீழான கட்டளை

எல் ஜீ டி/சி/4 (வீ) 4/4

1961 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 54 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான், இக்கட்டளை வாயிலாக, கங்கல உடபெயப்பத்து கிராமப் பிரதேசம் சம்பந்தமாக முன் சொல்லப்பட்ட பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1973 மே 21 இன் 60/4 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை அதனுடனுள்ள கடைசிப் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் 1973 செத்தெம்பர் 15 ஆந் திகதியிலிருந்து திருத்துகிறேன்.

"(ஆ) புதியதொரு கிராமச்சபை அக்கிராமப் பிரதேசத்திற்கு அமைக்கப்படும்வரை ஆய்வு உத்தியோகத்தர் திரு. தலகஹ முதியன்சலாகே வாமரத்தின செனரத் பண்டார அவர்களை அக்கிராமப் பிரதேசத்தின் அலுவல்களை நிர்வகிக்கும்படி பணிக்கிறேன்."

வில்லியம் நீல் த அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஞு செப்ரெம்பர் மீ 3 ந உ.

9–330—14.09.73 ம் திகதிய வர்த்தமானி இல. 77

### (நிர்வாகப்பிராந்தியம் உள்ளூராட்சி)

கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 265)

பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது :

இலங்கை நிர்வாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. வால்ரர் எட்கார் பர்ணந்து அவர்கள், மேற்கொண்டு கட்டளைகள் விடுக்கப்படும்வரை, 27.08.1973 ந் திகதியிலிருந்து சிலாப உள்ளூராட்சி உதவி ஆணையாளராக.

டீ. ராஜேந்திரா,
மேலதிகச்செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு

கொழும்பு,
1973 ம் ஞு ஒகஸ்ட் மீ 29 ந உ.

9–270—14.09.73 ம் திகதிய வர்த்தமானி இல. 77

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்
அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

**எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.**

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
1972 ம் ஞு மே மீ 5 ந உ.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**உள்ளூராட்சிச் சேவை**

உள்ளூராட்சி மின்சார அத்தியட்சர்கள் சேவையின் தரம் 4 ற்கு ஆட்சேர்ப்பிற்கான பரீட்சை

மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் மேல், தரம் 4 மின்சார அத்தியட்சர் பதவிகளுக்கு நியமனத்தின்பொருட்டு, கீழ்க்காணும் பரீட்சார்த்திகள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்களென்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

1. பி. டபிள்யு. மொகொட்டல, காலி மா. ந. ச.
2. எச். எச். விஜேசூரிய,கழுத்துறை ந. ச.
3. ஜி. நந்தகோபால், நீர்கொழும்பு, மா. ந. ச.
4. ஈ. எம். பி. எக்கநாயக்க, மாகோ கி. ச.
5. டி. டி. ஜயரத்ன, இரத்தினபுரி மா. ந. ச.
6. எச். வீ. பொன்சேகா, கழுத்துறை ந. ச.
7. எச். டபிள்யு. ஏ. டி. ஜயசுந்தரா, கம்பகா ந. ச.
8. எஸ். டி. பர்ணந்து, மாத்தறை ந. ச.

உடனடியாக நியமனங்களைக் கொடுப்பதற்கு அதிகாரசபை கையேற்கவில்லை. பதவி வெற்றிடங்கள் ஏற்படும்பொழுது நியமனங்கள் கொடுக்கப்படும்.

எட்கா பர்ணந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

உ. ஆ. சே. அ. சபை அலுவலகம்,
த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு செப்டம்பர் மீ 5 ந் உ.

9–332—14.09.73 ம் திகதிய வர்த்தமானி இல. 77

# ஆதன விற்பனைகள்

**சுன்னாகம் பட்டணசபை**

ஆதனவரிகள் செலுத்தாமைக்காக ஆதனங்கள் விற்பனவு செய்தல்

இதன் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களின் பேரால் 1964 ம் வருடம் 4 ம் கந்தாயம் தொடக்கம் 1971 ம் வருடம் வரை செலுத்தப்படாமலிருக்கும் வரிகளை அறவிடுவதற்காக குறிப்பிட்ட வரிகளை செலவு தொகையுடன் முறைப்படி செலுத்தப்படாமலிருக்கும் பட்சத்தில் 1946 ம் வருடத்திய 3 ம் இலக்க (அத்தியாயம் 256) பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 165 ம் 169 ம் (1) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு 1947 ம் வருடத்திய 29 ம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) 252 ம், 256 ம் பிரிவுகளுக்கிணங்க சுன்னாகம் பட்டிணசபைச் செயலாளரால் வழங்கப்பட்ட கட்டளையொன்றின் கீழ் கைப்பற்றுவதற்கு அசைவுள்ள ஆதனங்கள் இல்லாத பட்சத்தில் (1) வாடகைகளையும், ஆதாயங்களையும் (2) மரம் தடிகளையும், விளைபொருட்களையும் (3) வீட்டின் தளபாடங்களையும் (4) கீழ் குறிப்பிட்டுள்ள அந்தச் சொத்துக்களையும் பறிமுதல் செய்வதற்கும், பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை அந்தந்த இடங்களில் வைத்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அந்தந்தத் திகதியில் ஒவ்வொரு தினத்திலும் காலை 9.30 மணி தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்பனவு செய்யப்படும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்ளப்படுகின்றது.

வரியிறுப்பாளர்கள் கீழ்க்காணும் அட்டவணையில் விற்பனைக்காக விளம்பரப்படுத்தப்பட்டுள்ள எவ் ஆதனங்கள் மீதாகிலும் தங்களால் செலுத்தப்பட்டுள்ள தொகைகளுக்காக ஏதாவது ரசீதுகள் வைத்திருப்பின் அவைகளைச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவதுடன், அவ்வாறு நிரூபிப்பதன் பேரில் சம்பந்தப்பட்ட ஆதனங்கள் விற்பனையிலின்றும் விலக்கப்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அப்படியான ரசீதுகளை, விற்பனைக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் திகதிக்கு குறைந்தபட்சம் இரு தினங்களுக்கு முன் காரியாலயத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின் இத்தகைய சமர்ப்பிப்பு எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எச். ஈ. பி. தம்பிராசா,
செயலாளர்,
பட்டணசபை, சுன்னாகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம்,
1973 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 23 ந் உ.

**அட்டவணை**

1 ம் வட்டாரம்—
விற்பனைத் திகதி : 16.10.73
குமாரசாமிப் புலவர் வீதி :—

91/8, 91/10, 91/12, 91/13, 91/15, 91/17, 91/18, 91/19, 91/20, 91/25, 91/27, 91/29, 91/31, 91/32, 91/36, 91/38, 91/39, 91/41, 91/42, 91/43.

விற்பனைத் திகதி 18.10.73.
குமாரசாமிப் புலவர் வீதி :—

91/44, 91/46, 91/48, 91/49, 91/50, 91/51, 91/52, 91/53, 91/55, 91/56, 91/57, 91/58, 91/59, 91/60, 91/61, 91/63, 91/66, 91/70, 91/72, 91/74, 91/75, 91/76, 91/77, 91/78, 91/79, 91/80.

2 ம் வட்டாரம்—
விற்பனைத் திகதி 22.10.73.
குமாரசாமிப் புலவர் வீதி :—

118/15, 118/16, 118/21, 118/22, 118/27, 118/28, 118/29, 118/31, 118/32, 118/33, 118/34, 118/35, 118/36, 118/38.

விற்பனைத் திகதி 23.10.73
குமாரசாமிப் புலவர் வீதி :—

118/39, 118/40, 118/41, 118/42, 118/45, 118/50, 118/51, 118/54, 118/56, 118/57, 118/59, 118/60, 118/63.

விற்பனைத் திகதி 24.10.73
குமாரசாமிப் புலவர் வீதி :—

118/64, 118/69, 118/70, 118/72, 118/78, 118/83, 118/86, 118/87, 118/88, 188/89, 118/91, 152/3, 152/3, 152/3, 152/5, 152/6, 152/8, 152/9, 152/10.

விற்பனைத் திகதி—26.10.73
குமாரசாமிப் புலவர் வீதி :—

152/11, 152/13, 152/14, 152/17, 152/18, 152/20, 152/29, 152/30, 152/31, 166/3, 166/6, 166/7, 166/8, 166/9, 166/10, 166/11, 166/12, 166/13, 166/14, 166/15.

விற்பனைத் திகதி 29.10.73.
குமாரசாமிப் புலவர் வீதி :—

166/16, 166/20, 166/21, 166/22, 166/23, 166/24, 166/25, 166/26, 166/27, 166/28, 166/30, 166/31, 166/33, 166/34, 166/35, 166/36, 166/37, 166/38, 166/40, 166/41.

விற்பனைத் திகதி 30.10.73.
குமாரசாமிப் புலவர் வீதி :—

166/42, 166/43, 166/45, 166/46, 166/47, 166/48, 166/49, 166/50, 166/51, 166/53, 166/54, 166/55, 166/57, 166/58, 166/59, 166/60, 166/61, 166/62, 166/63, 166/64.

விற்பனைத் திகதி 31.10.73
குமாரசாமிப் புலவர் வீதி :—

166/65, 166/67, 166/68, 166/69, 166/71, 166/72, 166/74, 166/75, 166/76, 166/77, 166/78, 166/79, 166/80, 166/81, 166/82, 166/83, 166/84, 166/90, 166/91, 166/92, 166/94, 166/97, 166/98, 166/99, 166/103.

8 ம் வட்டாரம்.
விற்பனைத் திகதி : 1.11.73
சேர் சரவணமுத்து வீதி :—

26, 30, 30/1, 30/2, 30/3, 30/4, 30/6, 34/7, 34/8, 34/9, 34/10, 34/11, 34/12, 30/13, 34/14, 34/15, 34/16, 44, 44/1, 44/2, 44/3, 44/4, 44/5, 44/6, 44/7, 44/8, 44/9, 44/10, 44/11

விற்பனைத் திகதி 6.11.73.
உதயசூரியன் தெரு—

8/15, 8/16, 8/17, 8/18, 8/19, 8/20, 8/21, 8/22, 8/23, 8/24

விற்பனைத் திகதி 8.11.73
அம்பலவாணர் வீதி :—

23/2, 23/3, 23/4

9–273—14.09.73 ம் திகதிய வர்த்தமானி இல. 77

# நானாவித அறிவித்தல்கள்

## நிலாவெளிக் கிராமாட்சி மன்றம்

உள்ளூர் அதிகாரத்தாபனங்கள் நியமத்துணைவிதிகள் சட்டம்
அத்தியாயம் 261

உள்ளூரதிகாரத்தாபனங்கள் நியமத்துணைவிதிகள் சட்டத்தின் அத்தியாயம் 261 3 ஆம் பிரிவின் கீழ் திருக்கோணமலை மாவட்டத்து நிலாவெளிக் கிராமப் பிரதேசத்தின் கிராமாட்சிமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின்படி பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 15,001 ஆம் எண்கொண்ட 10.3.1972 ஆம் திகதிய பகுதி நான்கு—உள்ளூராட்சி—இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நியமத்துணைவிதிகள் பாகங்கள் 1, 2, 3 ம் இத்தீர்மானம் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென்று, நிலாவெளிக் கிராமாட்சி மன்றம் 261 ஆம் அத்தியாயமான உள்ளூரதிகாரத்தாபனங்கள் நியமத்துணைவிதிகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ், இத்தால் தீர்மானிக்கின்றது.

யே. எம். சரிப்,
தலைவர்,
கிராமாட்சி மன்றம், நிலாவெளி.

கிராமாட்சி மன்ற அலுவலகம்,
நிலாவெளி,
1973 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 30 ந உ.

9–278—14.09.73 ந திகதிய வர்த்தமானி இல. 77

---

## உடப்பு கிராமச் சபை

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூரதிகாரத் தாபனங்கள்
(நிலையான உபவிதிகள்) பற்றிய சட்டம்

உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நிலையான உபவிதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின்கீழ் சிலாபம் மாவட்டத்து உடப்புக் கிராமப்பிரதேசத்தின் கிராமசபையினால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் நியதிப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நிலையான உபவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சிலாபம் மாவட்டத்து உடப்புக் கிராமப்பிரதேசத்தின் கிராமசபையால் இத்தீர்மானம் ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானியில் பிரசுரமாகும் தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படற்குரியதென சம்மதமளிக்கப்படுகின்றது.

(அ) உள்ளூராட்சி அமைச்சரவர்களால் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதியின் 14,703 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும், பிரதிநிதிகள் சபையினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1969 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதியின் 14,885 ஆம் இலக்க வர்த்தமானியில் அவ்வங்கீகாரம் பிரசுரிக்கப்பட்ட நியமத்துணைவிதியின் 39 ஆம், 40 ஆம், 41 ஆம் பாகங்களையும்,

(ஆ) அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரவர்களால் 1972 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதியிடப்பட்டு உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நிலையான உபவிதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 2 ஆம் பிரிவின்படி, 1972 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதியின் 15,001 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் திகதியில் தேசிய அரசுப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டதென 1972 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதியின் 31 ஆம் இலக்க ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானியில் உள்ளூராட்சி மன்றங்கள் (நியமத்துணைவிதிகள்) சட்டம் பிரிவு 2 (3) இன் மூலமாக அறிவிக்கப்பட்ட நிலையான உபவிதிகள் 18 ஆவது பாகத்தில் (1) அபாயகரமானவையும் (2) அருவருப்பானவையும் (3) அபாயகரமும் அருவருப்பானவையுமாகிய தொழில்கள் சம்பந்தமான திருத்தியமைக்கப்பட்ட உபவிதிகளைச் சம்பூரணமாகவும்,

இத்தீர்மானம் ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளுவதென, சிலாபம் மாவட்டத்து உடப்புக் கிராமசபையால் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூரதிகாரத்தாபனங்கள் (நிலையான உபவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

பூ. கந்தசாமி,
தலைவர்,
உடப்பு கிராமச்சபை.

கிராமசபை அலுவலகம்,
உடப்பு, 1973 ம் ஆண்டு ஜூலை மீ 26 ந உ.

9–450—14.09.73 ந திகதிய வர்த்தமானி இல. 77

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் <u>அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு</u> என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் | .. | 7.9.73 வெள்ளி | .. | 21.8.73 வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 14.9.73 வெள்ளி | .. | 7.9.73 வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 21.9.73 வெள்ளி | .. | 14.9.73 வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 28.9.73 வெள்ளி | .. | 21.9.73 வெள்ளி | .. | ந.ப. 12.00 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.